Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.12/2026

**Depositions of PW-3**

| Name | திரு.ரகுபதி | Occupation | சார்பு ஆய்வாளர் |
|---|---|---|---|
| Father's name | சீனிவாசன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of March 2026.

26.03.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மல்லி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.07.2025 அன்று நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது விருதுநகர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு சென்று அங்கு சிகிச்சையிலிருந்த காயம்பட்ட நபரின் தந்தையான சுந்தர்ராஜ் என்பவரிடம் விசாரிக்க அவர் தனது குடும்ப உறுப்பினர்களிடம் கலந்து பேசிவிட்டு புகார் கொடுப்பதாக கூறியபடியால் மீண்டும் நிலையம் வந்து பின்னர் 17.07.2025 அன்று மேற்படி மருத்துவமனை சென்று மேற்படி நபரைவிசாரித்து அவர் கொடுத்த புகார்வாக்குமூலத்தை பெற்று 16.00 மணியளவில் நிலையம் வந்து அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.89/2025 பிரிவுகள்.281, 125(a) BNS ஆக வழக்கு பதிவு செய்தேன். **புகார் வாக்குமூலம் அசாஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அசாஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் வாதியின் புகார் வாக்குமூலத்தையும் முதல் தகவல் அறிக்கையும் சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். பின்னர்

அன்றைய தினமே சாட்சி முருகேஸ்வரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அன்றைய தினமே 16.45 மணியளவில் சம்பவயிடம் சென்று

சாட்சிகள் சுப்பிரமணியன் மற்றும் மகேஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **பார்வை மகஜர் அசாஆ.4 ஆகவும், வரைபடம் அசாஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் 20.08.2025 அன்று நிலையம் ஆஜரான எதிரியை காரணம் கூறி கைது செய்து தக்க இருநபர் பிணையில் விடுவித்தேன். பின்னர் 17.09.2025 அன்று மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.கண்ணன் அவர்களை விசாரித்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **மோட்டார் வாகன ஆய்வறிக்கை அசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் அன்றைய தினமே காயம்பட்டவருக்கு சிகிச்சை அளித்த திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் நாராயணன், விருதுநகர் அரசு மருத்துவமனை மருத்துவர்கள் ராஜ்குமார் மற்றும் விஜய்ஆனந்த் ஆகியோர்களை விசாரித்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று மற்றும் காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அசாஆ.7 ஆகவும் முருகேஸ்வரன் என்பவருக்கு விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டின் உண்மை நகல் அசாஆ.8 ஆகவும், அங்கு வழங்கப்பட் காயச்சான்று அசாஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் மருத்துவர் அளித்த காயச்சான்றிலிருந்து காயம்பட்டவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என தெரியவந்ததால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளான 281, 125(a) BNS லிருந்து 281, 125(b) BNS ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் அன்றைய தினமே இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள்.281, 125(b) BNS ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

மேற்படி இவ்வழக்கில் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் இவ்வழக்கிற்காக பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுளளது என்றால் சரியல்ல. இவ்வழக்கின் சாட்சிகளை சரிவர புலன்

விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய்யாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி கவனக்குறைவாகவோ அதிவேகமாகவோ வாகனத்தை ஓட்டவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.